MENMATHI KOVAI TAMIL MANDRAM   INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025    E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# குறுந்தொகை பாலைத்திணை பாடல்களில் பெண்பாற்புலவர்கள்

**ஆ.பிரபாகரன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: **B1/TAM23PDEC0362/2023**
தமிழ்த்துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி. (தன்னாட்சி)
பாரதியார் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது.
கோயம்புத்துர்,தமிழ்நாடு,இந்தியா

**முனைவர் நா.அனிதா**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை.
எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.
திருச்சி-621105.Ph: 8973523113.Email: anitha.n@ist.srmtrichy.edu.in

## "Women Poets in the Pālai Thinai Poems of Kurunthokai"

**A. PRABAKARAN**
**ASSISTANT PROFESSOR IN TAMIL**
**NEHRU INSTITUTE OF TECHNOLOGY.KALIYAPURAM.**
**COIMBATORE - 641105**
**nitprabakaran.a@nehrucolleges.com - 9159706380**

November - December

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

Dr.N.Anitha
Assistant Professor, Department of Tamil
SRM Institute of Science and Technology
Trichy

**Abstract**

The contribution of women poets in Sangam literature holds a significant place in the history of Tamil classical poetry. In particular, the Pālai Thinai poems of Kurunthokai vividly portray the inner emotions, psychological states, ethical values, and social positions of women during the Sangam period. Through their poetic expressions, the women poets depicted the subtleties of love, separation, modesty, and fidelity with profound emotional depth and refined linguistic beauty. This paper examines the eighty-four Pālai Thinai poems of Kurunthokai with a special focus on the works of prominent women poets such as Ōthalantaiyār, Avvaiyār, Vellivīthiyār, Kachipēṭṭu Nannakāyiyār, Siraikkudi Ānthaiyār, and Karuvūr Ōtha Ñāniyār. Their verses not only highlight the emotional and moral dimensions of womanhood but also reveal the poetesses' intellectual perception of love and life in harmony with nature and tradition. The analysis reveals that these women poets transformed personal feelings into universal human experiences, linking individual emotion with collective culture. Their poetry gives voice to the silenced aspects of women's lives and stands as a powerful testimony to the cultural and literary agency of women in early Tamil society. Thus, the Pālai Thinai poems of Kurunthokai emerge as invaluable cultural documents reflecting the aesthetic, emotional, and social consciousness of women poets in the Sangam age.

**Keywords:** Kurunthokai, Pālai Thinai, Women Poets, Femininity, Sangam Literature, Emotions, Culture, Aesthetics.

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க இலக்கியங்களில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக குறுந்தொகை நூலில் இடம்பெறும் பாலைத்திணைப்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

பாடல்கள், பெண்களின் மனநிலைகள், உணர்ச்சிகள், ஒழுக்கம், மரபு மற்றும் சமூகப் பங்களிப்புகளை வெளிப்படுத்தும் சிறப்புக் களமாக விளங்குகின்றன. பெண்பாற்புலவர்கள் தங்கள் கண்ணோட்டத்தில் பெண்களின் இயல்பு, பெண்மையின் சிறப்பு, தாய்மை உணர்வு, காதல், பிரிவு மற்றும் சமூகப் பண்பாடுகளை ஆழமான உவமைகளின் வழியாகச் சித்தரித்துள்ளனர். இந்தக் கட்டுரை, குறுந்தொகையில் இடம்பெறும் 84 பாலைத்திணைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, பெண்பாற்புலவர்கள் உருவாக்கிய அகப்பாடல்களில் பெண்களின் உளவியல் நிலையையும் மொழிநடையையும் ஆராய்கிறது. ஒதலந்தையார், ஔவையார், வெள்ளிவீதியார், கச்சிப்பேட்டு நன்னாகையார், சிறைக்குடி ஆந்தையார், கருவூர் ஓத ஞானியார் ஆகியோரின் பாடல்கள் இதற்கான முக்கிய ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. பெண்பாற்புலவர்கள் தங்கள் பாடல்களில் பெண்களின் குரலை சமூக மரபுகளோடும், ஒழுக்க நெறிகளோடும், இயற்கைச் சித்திரங்களோடும் இணைத்து வெளிப்படுத்தியுள்ளனர். தலைவியின் உணர்ச்சி, அவளது நாணம், மடம், அன்பு, பிரிவு ஆகியவை பெண்மையின் நுட்பத்தையும் அழகியலையும் வெளிப்படுத்துகின்றன. அதேசமயம், காதலின் ஒழுக்கம், குடும்ப ஒற்றுமை, சமூகப் பொறுப்பு போன்ற மனிதநேய மதிப்புகளும் பாடல்களில் பிரதிபலிக்கின்றன. இதன் மூலம், குறுந்தொகை பாலைத்திணைப் பாடல்கள் பெண்களின் குரலை வெளிக்கொணரும் இலக்கியப் பங்களிப்பாகவும், பெண்பாற்புலவர்கள் சங்ககால சமுதாயத்தில் பெற்றிருந்த சுயநிலையை வெளிப்படுத்தும் பண்பாட்டு ஆவணமாகவும் அமைகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

## முன்னுரை

உயிரினங்களின் மேம்பாட்டிற்கு தாய்மைதான் துவக்கமாக இருந்தாலும் மற்ற உயிரினங்களுக்கு இல்லாத வரையறைகள் பெண்களுக்கும் பெண்பாற்புலவர்களுக்கும் விளங்குவது சற்று வருத்தம் அளிக்கிறது. ஆண்களைப்போல இயல்பான மொழிநடையை பெண்கள் கையாளுவதில்லை என்றாலும் தான் கூறும் கருத்துக்களை உவமையின் ஆளுமையாக குறிப்பிடுகின்றனர். அதில் அகப்பாடல்கள் அதிகமாக விளங்கும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாக விளங்கும் குறுந்தொகையே அதற்குச் சான்றாக உள்ளது. அதில் **7,11,12,15,16,20,22,27,28,30,37,39,40,41,43,44,48,56,59,63,67,71,77,79,84,104,124,130,131,135,137,140,147,149,151,154,168,174,180,207,209,211,213,216,218,224,229,232,235,237,250,253,254,255,256,260,262,267,273,274,277,278,281,282,283,285,307,329,343,347,348,350,352,356,363,369,378,380,383,388,390,395,396,398,** மொத்தம் (84) பாடல்கள் பாலைத்திணைப் பாடல்களாக விளங்குகிறது. இப்பிரிதலின் முக்கியத்துவத்தையும் தலைவி தலைவன் மேல் கொண்டுள்ள காதலையும், காதலின்பால் கடைபிடிக்கப்படும் ஒழுக்க முறைகளையும் மரபுகளையும் பண்பாடுகளையும் எடுத்து இயம்புகிறது. குறுந்தொகையில் சங்கப்புலவர்கள் சிறப்பான அழகியல் கூறுகளையும் வாழ்வியல் உணர்வுகளையும் உவமையின் பங்களிப்போடு கையாளுதல் தனிச்சிறப்பாக விளங்குகிறது. அங்கனம் பார்க்கையில் பெண்களின் இயல்பு, பெண்களின் சிறப்பு, பெண்களின் மரபு, போன்றவை சிறந்து விளங்குகிறது. ஆதலால் பெண்களின் விழுமியங்களையும் பெண்மொழியையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**குறுந்தொகை பெண்களின் இயல்பு;**

இந்நூல் அகப்பொருள்களை அகவற்பாக்களால் கூறுகின்ற போதும் முதற்பொருள் மற்றும் கருப்பொருட்களை விட உரிப்பொருளுக்கே சிறப்பிடம் தந்துள்ளது. இதில் வருணனைகள் குறைந்தும் உணர்வு மிகுந்தும் காணப்படுகின்றன. எட்டுத்தொகை தொகுத்துச் சுட்டும் பழம்பாடலில் "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது. குறுந்தொகையில் பெண்களின் சிறப்பியல்புகளை தலைவியின் பிரிவுத்துயர் ஆற்றாமைக்குச் சான்றாகப் பாலைத்திணையில் **ஓதலந்தையார் 12,329 ஔவையார் 15,28,39,43,388, வெள்ளிவீதியார் 27, 44,130,149, கச்சிப்பேட்டு நன்னாகையார் 30,180 சிறைக்குடி ஆந்தையர் 56,168,273 கருவூர் ஓத ஞானியார் 71, அள்ளூர் நன்முல்லையார்67,140,237 ஊன் பித்தையார்232, ஓரில் பிச்சையார் 277 காலேறி கடிகையார்267 அணிலோடு முன்றிலார்41, வெண்புதியார்174** ஆகியோர் பாடல்கள் படைத்துள்ளனர். சங்கப் பெண்பாற் புலவர்கள் பெண்கள் பேசிய மொழியை இனம்காட்ட முயல்கின்றனர். பெண்களின் மரபு, ஒழுக்கம், செயல்பாடுகள், நடைமுறைகள் போன்றவைகளை முழுமையாகக் கொண்டு பெண்பாற் புலவர்கள் பெண்களின் தன்மையை ஓங்கி உயர வைப்பது இப்பாடலின் தனிச் சிறப்பாகக் காண்பிக்கப்படுகிறது. அதில் தலைவியின் இயல்பான பெண்மையின் குணநலன்களை பெண்பாற் புலவர்கள் பட்டியலிட்டுக் காட்டுகின்றனர். காதலின் புதுமையான மொழியில் கூறினாலும் தலைவியின் அன்புதான் காதலை முழுமையாக எடுத்துக்காட்டுகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்” (குறள்.71)**

அன்புக்கு அடைத்து வைக்கும் தாழ் எதுவும் உண்டோ? அன்புடையாரின் சிறு கண்ணீரே அவர் அன்பினைப் பலர் அறிய வெளிப்படுத்திவிடும் என்பதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தலைவியின் இயல்பு நிலையோடு அவளது காதலையும் தோழி உணர்த்துவதை தலைவியிடம் கோடி கூறியது என்ற கூற்றுகள் மூலம் பெண்பாற்புலவர்கள் முன்னிறுத்துகின்றனர். அதன் கண் பார்க்கையில்.

**“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**
**ஓரேன்! யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்,**
**அலமரல் அசை வளி அலைப்ப, என்**
**உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே?” (குறுந்’5)**

போன்றவை பெண்களின் இயல்புநிலையை குறுந்தொகையில் தலைவியோடு ஒப்பிடுகையில் தலைவனிடம் தலைவி பேச முற்படும்போது மிகக் குறைந்த அளவு சொற்களையே கையாண்டுள்ளாள்.

**‘அமிழ்ந்து பொதி செந்நா அஞ்சவந்த**
**வளர்ந்திலங்கு வையையிற்றுச் சின்மொழி**
**அறிவை (குறுந்’14)**

இப்பாடல் சின்மொழி அறிவை என்ற தொடர் பெண்ணின் மொழியின் தன்மையையும் அவளது பருவத்தையும் விளக்கி நிற்கிறது. அது மட்டுமல்லாமல், தலைவன் பேசுகின்ற பொய்யான மொழியினை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

தலைவி குறிப்பதற்கு பணிமொழி என்ற சொல்லை பயன்படுத்தி உள்ளாள்.

**"ஒரு நாள் வாரலன் இரு நாள் வாரலன்**
**பன்னால் வந்து பணிமொழி பயிற்றியோன்**
**நன்னார் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை" (குறுந்'176)**

இன்று தலைவன் இயல்பு நடையை குறுந்தொகை புலப்படுத்துகிறது.

**பெண்களின்சிறப்பு:**

**"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்**
**வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல''(குறள்.1100)**

என்ற குறட்பாவுடன் இது ஒப்புநோக்கத்தக்கது தலைவி, தலைவனோடு கூடும் களவொழுக்கம் நான்கு வகையாகக் கூறப்பட்டுள்ளது. அவை இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியற் கூட்டம் என்பன. இது **"கைகோள்'** என்பதில் இடம்பெறுகிறது. கைகோள் என்பது ஒழுக்கலாறு. இன்ப ஒழுக்கம் பற்றியது.

**"காமப் புணர்ச்சியும், இடந்தலைப் படலும்,**
**பாங்கொடு தழாஅலும், தோழியிற் புணர்வும் என்று**
**ஆங்க நால் வகையினும் அடைந்த சால்பொடு**
**மறையென மொழிதல் மறையோர் ஆறே''(தொல்-1442)**

இயற்கைப் புணர்ச்சியின்போது தலைவி தன்னுடைய வேட்கையை வெளிப்படக் கூறாது கண்களால், குறிப்பால் உணர்த்துவாள். இதை,

**"நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்**
**கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்'' (தொல். கள:1042)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தலைமகன் வேட்கை மிகுதியினால் மெய்யுறு புணர்ச்சியை விரும்பினான் ஆயினும் தலைமகள்பால் தோன்றும் அச்சமும், நாணமும், மடமும் அதற்குத் தடையாய் நிற்கும். அவளது நலத்தினை தலைமகன் பாராட்டி, அத்தடைகளை நீக்கிப் படிக்கல் ஆக்குவான். அவ்வளவு எளிதில் மெய்தொட்டுப் பயிறல் சங்க காலத்தில் நிகழாது. அறிவு சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த, குடிசார்ந்த சம நிலையில்தான் நிகழும் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தெனிழைக்கும் நாடனோடு நட்பே. (குறுந்.3.)**

என்ற பாடல் தலைவனின் அன்பின் ஆழத்தையும் தலைவியின் நம்பிக்கையையும் எடுத்துரைக்கிறது.

**"வினையே ஆடவர்க்கு உயிரே"(குறுந்.135)**

என்ற தொடர் ஆண்களின் கடமையைக் கூறுகிறது. பெண்களின் பாடல்கள் உவமையின் சிறப்பாக விளங்குகின்றன. செவிலித்தாயின் உணர்வுநிலையைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

**“ஞாயிறு காயாது மர நிழற்பட்டு.**
**மழைமுதற் சிறுநெறி மனன் மிகத்தா அய்த்.**
**தன்மழை தலையின் நந்தீந்துச்**
**சுடர்வாய் நெடுவேற் காளையோடு.**
**மடமா வரிவை போகிய சுரனே” (குறுந்’176)**

இப்பாடலில் பெண்ணின் வளர்ப்புநிலை, போகும்வழி, துன்பம் பற்றி இருக்கின்றன. தெய்வத்தை வேண்டுதல், பெண்ணின் இள வயதுநிலை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

போன்றவற்றிற்கு பெண்மொழியிலேயே புலவர்கள் பயன்படுத்தி உள்ளனர். தலைவியின் வாழ்க்கையில் மூன்று பெண்கள் முதன்மையாக விளங்கினார்கள். அவர்கள் தலைவி மேல் அக்கறை கொண்டவர்களாக விளங்கினார்கள் என்பதை ஔவையார் தம் பாடல் மூலம் விளக்கியுள்ளார். குறுந்தொகையில் 51 அகப்பாடல்களாக விளங்குகின்றன. அதில் தலைவிக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக 29 அகப்பாடல்கள் தலைவிக்காக மட்டுமே பாடப்பட்டுள்ளது.

**பறைபடப் பணில மார்ப விரைகுள்பு**
**தொன்மோதளத்துபொதிகையில்தோன்றிய**
**நாலு ஊர் நன்மொழி போல. கேசவர்**
**வாயக்கின்றே தோழி யாய் கலற்**
**சேயிலே வெள்வேள் விடளையோடு**
**தொகுவாளையை முன்கமடைந்தைநட்பே”**

**(குறுந்’25)**

தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்டாள் என்பதனை அறிவுறுத்தும் செய்தியாக இப்பாடல் விளங்குகிறது. அதுமட்டுமல்லாமல், தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் துன்பத்தை நீக்க தலைவனின் மார்பில் படுத்து உறங்கினால் போதும் என தோழியிடம் கூறுகிறாள். அதனை விளக்குவதாக இப்பாடல் விளங்குகிறது.

**“பூழ்க்காலன்ன செங்கா ளுந்தின்.**
**உழ்படு முதுகாய் உழையி ணங் கவரும்.**
**அரும்பணி யாச்சிரன் தீர்க்கும்.**
**மருந்து பிரிதில்லை அவர் மணந்த மார்பே.”**

**(குறுந்’15)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

என்று அவளின் உள்ளுணர்வு வெளிப்பாடாக இப்பாடல் விளங்குகிறது.

**பெண்களின் மரபு;**

தலைவியின் துயரத்தை வெளிப்படுத்துவதில் பெண்பாற்புலவர்கள் சமூக மரபை பின்பற்றி உள்ளனர். தமது துயர் பற்றி பேசுவதை உவமையாக கூறியுள்ளார் என்பதை. வெள்ளி வீதியார் தம்பாடல்மூலம் குறிப்பிட்டுள்ளார்.

**"கன்றும் உன்னாது கலத்தினும் படாது**
**நல்லான் தீம்பால் நிலத்துக்காங்கு**
**எனக்கு ஆகாது என்னைக்கும் உதவாது**
**பசலை ஊனிஇயர் வேண்டும்.**
**தீதலை அல்கு லென் மாமைக் கவினே"(குறுந்'27)**

என்று பசுவின் பால் கன்றும் முன்னா களத்திலும் படாமல் நிலத்திலும் வீழ்கின்றது என இயல்பான உவமையில் தலைவன் பிரிவைக் கூறுவதாக இப்பாடல் அமைகிறது. சங்கப்பாடல்களில் பின்புல வருணனை அறிவுறுத்துதல், உள்ளுறை, இறைச்சி, குறியீடு ஆகிய பல்வேறு உத்திகளை இயற்கையோடு ஒப்பிட்டுக் கூறுகிறார் ஒக்கூர் மாசாத்தியார். கார் பருவத்தில் தலைவன் வராமையால் ஏற்படும் துன்பத்தினை முல்லை நில வருணனை மூலம் பதிவு செய்துள்ளார்.

**"பழமைக் கழித்த புதுப்புன வரகின்.**
**இருளை மேய்த்த குறைத்தலை பரவை.**
**அறிவுசேர் அருகில் பூத்த முல்லை**
**விருதுசிரித் தண்ண பசுவின் மென்பினிக்**
**குறுகை அவிழ்ந்த நறுமலர் பறவின்**
**வண்டு சூல் மாலையும் வரார்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**கண்டிசின் தோழி பொருட்பிரிந்தோரே"'. (குறுந்'220)**

என்று முல்லை நிலத்தில் மலரும் பூ, நிறம், நேரம், மணம் என்ற வர்ணனைகள் மூலமாகத் தலைவன் பிரிவைத் தலைவி கூறுகிறாள் என்று பெண்பாற்புலவர்கள் மரபாகக் கூறுகின்றனர்.

**தொகுப்புரை:**

சங்க இலக்கியப் பரப்பில் பெண்பாற்புலவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக குறுந்தொகை நூலில் பாலைத்திணைச் சார்ந்த பாடல்கள், பெண்களின் உளவியல் நிலை, உணர்ச்சி உலகம், மரபு, ஒழுக்கம் மற்றும் காதலின் நுட்பநிலைகளை வெளிப்படுத்தும் சிறந்த படைப்புகளாக விளங்குகின்றன. இப்பாடல்களில் பெண்பாற்புலவர்கள் தங்களின் பெண் அனுபவத்தையும் வாழ்வியலையும் கவிதை வடிவில் கலைநயத்துடன் வெளிப்படுத்தியுள்ளனர்.பெண்களின் உணர்வுகளைச் சமூக மரபுகளோடும் இயற்கை உலகோடும் இணைத்துக் கூறும் திறமை இவர்களின் கவிதைகளின் முக்கிய அம்சமாகும். தலைவியின் அன்பு, பிரிவு, நாணம், மடம் போன்ற உளநிலைகள் உவமைகள், குறியீடுகள் மற்றும் இயற்கைச் சித்திரங்களின் வழியாக வெளிப்படுகின்றன. இதன் மூலம் பெண்பாற்புலவர்கள் காதலை ஒரு தனிப்பட்ட அனுபவமாக மட்டும் அல்லாது சமூக ஒழுக்கம் மற்றும் பண்பாட்டின் அடையாளமாகவும் எடுத்துரைக்கின்றனர்.ஔவையார், வெள்ளிவீதியார், கச்சிப்பேட்டு நன்னாகையார், சிறைக்குடி ஆந்தையார், கருவூர் ஓத ஞானியார் போன்ற பெண்பாற்புலவர்கள் உருவாக்கியப் பாடல்கள் பெண்களின் உண்மையான உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துவதோடு,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

பெண்மையின் சிறப்பையும், தாய்மை உணர்வையும், காதலின் பரிமாணங்களையும் ஆழமாக வெளிக்கொணர்கின்றன.இதனால், குறுந்தொகைப் பாலைத்திணைப் பாடல்களில் பெண்பாற்புலவர்கள் எழுதிய கவிதைகள் பெண்களின் சமூக நிலையும் மனப்பான்மையும் வெளிப்படுத்தும் முக்கிய ஆவணங்களாக அமைகின்றன. இவைப் பெண்களின் உணர்ச்சியையும், அறிவியலையும், அழகியலையும் பிரதிபலிக்கும் சங்ககாலத்தின் நிலையானச் சான்றுகளாகத் திகழ்கின்றன. பெண்களின் குரலும், பெண் மொழியும், பெண்மையின் பெருமையும் சங்க இலக்கியத்தின் ஓர் அங்கமாக மிளிர்ந்தது என்பது இக்கட்டுரையின் நிறைவாகும்.

**துணைநூற்பட்டியல் ;**

1.இளம்பூரணர் “**தொல்காப்பியம் பொருளதிகாரம்**” ,சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
முதற் பதிப்பு 1953. சென்னை-600 018

2.சாமிநாதையர், உ. வே. “**பத்துப்பாட்டு மூலமும் உரையும்**” தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர், 1986.

3. வையாபுரிப்பிள்ளை சு.”**சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்)**,” பாரி நிலையம்,
சென்னை வெளியீடு, முதற்பதிப்பு 1940,

4. ராமலிங்கம்பிள்ளை - **திருக்குறள் மூலமும் உரையும்** நேஷனல் புக் டிரஸ்ட்,இந்தியாபுதுதில்லி – 110070 முதற்பதிப்பு – 2001

5. க .கோவிந்தன் **சங்கத் தமிழ் புலவர் வரிசை பெண்பாற் புலவர்கள்** சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை